## முக்கூடல் பகுதியில் சூறைக்காற்றுடன் மழை: 3,000 வாழைகள் சேதம்

First Published : 06 Mar 2012 02:59:40 PM IST

அம்பாசமுத்திரம், மார்ச் 5: திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை சூறைக்காற்றுடன் பெய்த மழையால் 3,000-க்கும் மேற்பட்ட வாழை
கள் சாய்ந்து சேதமடைந்தன.

தாமிரபரணி பாசனத்தில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், பத்தமடை, சேரன்மகாதேவி, காருகுறிச்சி, சக்திகுளம், கோபாலசமுத்திரம், முக்கூடல் பகுதியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழைப்பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது வாழைப்பயிர் அறுவடை செய்யும் பருவத்தில் உள்ளன.இந்நிலையில், முக்கூடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை சூறைக்காற்றுடன் பெய்த மழையால் முக்கூடல், கபாலிபாறை பகுதியில் 3,000-க்கும் மேற்பட்ட வாழைகள் சாய்ந்து சேதமடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்."இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை ஒன்றுக்கு ரூ.100 வீதம் இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார் மாவட்ட
விவசாய சங்கச் செயலர் ஆர். கசமுத்து.

## காவிரி டெல்டா மாவட்டங்களில் 13.25 லட்சம் டன் நெல் கொள்முதல்

First Published : 06 Mar 2012 05:04:42 PM IST

தஞ்சாவூர், மார்ச் 5: தஞ்சாவூர் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில் நிகழாண்டில் இதுவரை 13.25 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த குறுவை, சம்பா பருவங்களில் காவிரியில் தண்ணீர் வரத்தும், வட கிழக்குப் பருவ மழையும் எதிர்பார்த்த அளவுக்குப் பெய்ததால், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய டெல்டா

மாவட்டங்களில் குறுவை, சம்பா நெல் சாகுபடி பரப்பளவு அதிகரித்தது. குறிப்பாக, சம்பா நெல் சாகுபடி 4.30 லட்சம் ஹெக்டேர் மேற்கொள்ளப்பட்டது. இதைத்தொடர்ந்து, ஜனவரி மாதத்தில் அறுவடைப் பணிகள் தொடங்கின.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் இதுவரை 98,000 ஹெக்டேரில் அறுவடைப் பணிகள் முடிவடைந்துள்ளன. தாளடி சாகுபடியில் 28,000 ஹெக்டேரில் அறுவடை செய்யப்பட்டுள்ளன. நிகழ் பருவத்தில் புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர் பெரிய அளவில் இல்லாதால், மகசூலிலும் பாதிப்பு இல்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சராசரியாக ஹெக்டேருக்கு 6.5 டன் நெல் மகசூல் கிடைத்து வருகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் ஹெக்டேருக்கு ஏறத்தாழ 8 டன் மகசூல் பெறப்படுகிறது.

எனவே, காவிரி டெல்டா மாவட்டங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாகத் திறக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 419 இடங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோல, திருவாரூர் மாவட்டத்தில் 416 இடங்களிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 242 இடங்களிலும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைப் பருவத்திலிருந்து (1.10.2011) இதுவரை 4.62 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 1.04 லட்சம் டன் அதிகம். இதுவரை 4.20 லட்சம் டன் நெல் மூட்டைகள் கிடங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

திருவாரூர் மாவட்டத்தில் நிகழ் குறுவை, சம்பா பருவத்தில் 5.54 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டைவிட 1.25 லட்சம் டன் கூடுதல்.


நாகப்பட்டினம் மாவட்டத்தில் நிகழ் குறுவை, சம்பா பருவத்தில் 3.03 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில், இதுவரை 2.48 லட்சம் டன் நெல் மூட்டைகள் கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. காவிரி டெல்டா மாவட்டங்களில் மொத்தத்தில் நிகழ் குறுவை, சம்பா பருவத்தில் 13.25 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல, காவிரி டெல்டா மாவட்டங்களிலிருந்து மார்ச் 3-ம் தேதி வரை 6.4 லட்சம் டன் நெல் மூட்டைகள் சரக்கு ரயில்கள் மூலம் சென்னை, தருமபுரி, ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள கிடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களில் கடந்த ஆண்டைவிட நிகழாண்டில் 50 சதம் கூடுதலாக நெல் மூட்டைகள் ரயில்களில் இயக்கம் செய்யப்பட்டுள்ளன அனுப்பப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## மதுரை பகுதியில் நெல் அறுவடை வயலில் பயறு மற்றும் உளுந்து சாகுபடி

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,00:00 IST




மதுரை, விருதுநகர், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் பகுதிகளில் பெரியார், வைகை பாசன திட்டத்தின்கீழ் 1,45,000 ஏக்கர் நிலப்பரப்பில் கண்மாய், கிணற்றுப்பாசனம் மற்றும் பெய்த மழை இவைகளின் உதவியால் நெல் சாகுபடியை செய்தவர்கள் அறுவடையைத் துவங்கியுள்ளனர். விவசாயிகள் ஏக்கரில் 30 மூடை வரை மகசூல் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.
மூடை ரூ.650 வீதம் 30 மூடைக்கு வரவு ரூ.19,500 எதிர்பார்க்கின்றனர். சாகுபடி செலவு ரூ.8000 போக லாபம் ரூ.11,500 கிடைக்கலாம். இதோடு வைக்கோலிலும் வரவு ரூ.500 வரை கிடைக்கும். சில விவசாயிகள் நெல் அறுவடை செய்த நிலத்தில் பசுந்தாள் உரச் செடிகளை விதைத்து நிலவளத்தை கூடுதலாக்க முயற்சிக்கின்றனர்.
மற்ற விவசாயிகள் நெல் வயலில் பயறு, உளுந்து இவைகளை துணிச்சலாக சாகுபடி செய்யத் துவங்கிவிட்டனர். உளுந்தில் ஏடீடி 2, ஆடுதுறை 5 ரகங்களையும் பச்சைப்பயறில் கே.எம்.2 ரகத்தினையும் சாகுபடி செய்கிறார்கள். சமயோசிதமாக ஜனவரி 15 முதல் பிப்ரவரி 15 தேதிக்குள் விதைப்பினை முடித்துள்ளனர். இதைவிட தள்ளி விதைத்தால் பயிர்கள் பின்பருவத்தில் வறட்சிக்கு

உள்ளாகி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படும் என்பதை முற்போக்கு விவசாயிகள் நன்கு தெரிந்துவைத்துள்ளனர். வயலில் சொட்டை இடம் இல்லாமல் வயல் பூராவும் விதையை சீராக விழும்படி விதைக்கின்றனர். விதைக்கும் சமயம் பூமி மெழுகு பதத்தினை கொண்டிருப்பதை கவனித்து பணி செய்கின்றனர். வயலில் நீர் தேங்கி இருப்பதாகக் கண்டால் உடனே வடித்துவிடுகின்றனர்.

விதையினை விதைக்கும் போது 10 கிலோ விதைக்கு ஒரு பொட்டலம் ரைசோபியம் நுண்ணுயிரியை அரிசிக்கஞ்சியில் நன்றாகக் கலக்குகின்றனர். ஏக்கருக்கு 20 கிலோ விதையளவு உபயோகிக்கின்றனர். விதை விதைத்த 10-15 நாட்களில் பயிர் பாதுகாப்பு செய்து, இலைகளைப் பாதிக்கும் பூச்சிகளை அழிக்கின்றனர். சாறு உறிஞ்சும் பூச்சிகள், காய்ப்புழு இவைகளை அழிக்க 3 சதம் வேப்ப எண்ணெய் கரைசல் தெளிக்கின்றனர்.

எலிகள் பாதிப்பில்லாமல் கவனித்துக் கொண்டு, செடிகளில் உள்ள களைச்செடிகளை கவனமாக கையால் அகற்றுகின்றனர். பூமியிலுள்ள ஈரம் ஆவியாக போகாமல் தடுக்க பிடுங்கிய நெல் தாள்கள் போட்டு பூமியை மூடிவிடுகின்றனர்.

சங்கு பருவம் அதாவது செடிகளில் பூக்கள் தோன்றும் போது நான்கு கிலோ டிஏபி உரத்தை எடுத்து 20 லிட்டர் நீரில் கரைத்து 12 மணி நேரம் அப்படியே வைத்து தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து 180 லிட்டர் நீரில் கலந்து செடிகளின் மேல் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கின்றனர். 10-15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்கின்றனர்.

விவசாயிகள் பயறு, உளுந்தில் மதுரைப் பகுதியில் சராசரியாக ஏக்கரில் 400 கிலோ வரை மகசூல் எடுத்துவருகின்றனர். விவசாயிகளுக்கு மதுரை விவசாயக்கல்லூரி உதவி வருகின்றது. இதனால் பயனடைந்த விவசாயிகள் கூறுவது யாதெனில், உளுந்து, பாசிப்பயறு இவைகளில் 43 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைப்பதாகும்.

-எஸ்.எஸ்.நாகராஜன்.

## நவீன தொழில்நுட்பம்


பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,00:00 IST

பயறுவகைப்பயிர்கள் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரம்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்தின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் அறுவடை செய்யும் பகுதி, மணிகளை பிரித்தெடுக்கும் பகுதி, தூற்றும் பகுதி ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இதன் உள்ளே

மணிகளைக் கோணிப்பைகளில் சேகரிக்கும் பகுதியும் உள்ளது. அறுவடை செய்யும்போது பயறுவகைப் பயிர்கள் தரைமட்டத்திற்கு மேல் அறுவடை செய்யப்பட்டு உள்வாங்கிக் கொள்கின்றன.
அறுவடை இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது ஏக்கருக்கு ரூ.1180 மட்டுமே செலவாகிறது. ஆனால் நடைமுறை பணியாளர்களைக் கொண்டு அறுவடை செய்வதால் ரூ.3500 செலவாகிறது. எனவே இயந்திரத்தினைக் கொண்டு அறுவடை செய்வதால் ஏக்கருக்கு ரூ.2320 வரை சேமிக்கலாம்.
தஞ்சாவூர் மாவட்டம், பனையக்கோட்டை என்ற கிராமத்தைச் சேர்ந்த பி.ஆர்.ராஜேந்திரன் என்ற விவசாயி காரீப் பருவத்தில் தனது தோட்டக்கால் உளுந்து பயிரை ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரத்தைப் பயன்படுத்தி சுமார் 30 ஏக்கர் அறுவடை செய்து பயனடைந்துள்ளார். மேலும் அவர் தனது அனுபவத்தைக் கூறுகையில் பணியாளர்களைக் கொண்டு அறுவடை செய்வதைவிட இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது சுமார் 40 சதவீதம் செலவு குறைவதாக கூறுகிறார். பணியாளர் பற்றாக் குறையால் நெல் அறுவடை இயந்திரத்தைப் பயன்படுத்தி உளுந்தை அறுவடை செய்தார். அதில் மண்கட்டிகளும் சேர்ந்து வந்ததால் மீண்டும் சுத்தப்படுத்த சற்று கூடுதல் செலவாகிறது. ஆனால் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மைய அறுவடை இயந்திரத்தைப் பயன்படுத்தும் போது இதுபோன்ற சிரமங்கள் இல்லாமல் சுத்தமான மணிகள் கிடைத்தன. மேலும் சாதாரண முறையில் பணியாளர்களை வைத்து அறுவடை செய்யும்போது ஒரு ஏக்கருக்கு அறுவடை செய்ய 1500 ரூபாயும், வயலிலிருந்து களத்திற்கு கொண்டுவருவதற்கு கூலியாக 600 ரூபாயும், டிராக்டர் கொண்டு மணிகளைப் பிரித்தெடுக்க 1300 ரூபாயும், ஆகமொத்தம் ரூ.3400 செலவு பிடித்தது. ஆனால் இயந்திரத்தைப் பயன்படுத்தி அறுவடை செய்யும்போது அதிக அளவாக 2 மணி நேரமாகிறது. செலவு ரூ.1800 மட்டுமே. இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது நேரம் மிச்சப்படுவதோடு பணியாளர்கள் தேவையும் குறைகிறது.
இயந்திரத்தைக் கொண்டு அறுவடை செய்ய ஏக்கருக்கு ஒரு மணி முதல் ஒன்றரை மணி நேரமே ஆகிறது என்று அனுபவ விவசாயி தெரிவிக்கிறார். குறித்த நேரத்தில் அனைத்து வேலைகளும் முடிந்துவிடுவதால் மழை, காற்று, விலங்கினங்களால் ஏற்படும் சேதம் பெருமளவு தவிர்க்கப்படுகிறது. எனவே உழவர்கள் அறுவடை இயந்திரத்தைப் பயன்படுத்தி பயனடையலாம்.
(**தகவல்:** முனைவர் சே.கீதா, முனைவர் செ.க.நடராஜன், முனைவர் ப.ராஜரத்தினம், தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையம், வம்பன். 04322-296 447)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## நெல்வயலில் ஒருங்கிணைந்த எலி மேலாண்மை

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,00:00 IST



* பயிர் செய்வதற்கு முன் வரப்பு களில் உள்ள எலி வளைகளை உடைத்து தாய் எலிகளையும் குட்டிகளையும் சேகரித்து அழிக்க வேண்டும். வரப்புகளைச் செதுக்கி குறுகலாக அமைப்பதால் எலிகள் வளைகளை அமைத்து இனப்பெருக்கம் செய்ய இயலாது. தேவையற்ற களைச் செடிகளைப் பிடுங்கி அழிப்பதால் எலிகள் அவற்றில் பதுங்குவதைத் தடுக்கலாம்.

* அறுவடைக்குப் பிறகு சேரும் வைக்கோல் போர்களை வயல் களுக்கு அருகாமையில் வைக்காமல் விரைவில் காலி செய்துவிட வேண்டும். அதிக ஒளி வீசக்கூடிய விளக்குகளை வயல்வெளியில் சென்று காண்பித்து வழியில் தென்படும் எலிகளை எளிதில் வேட்டையாடி கைவினை முறைகளால் கொல்ல முடியும்.

* வரப்பு ஓரம் உள்ள எலி வளைகளுக்குள் நீரை ஊற்றி எலிகளை மூச்சுத்திணறச் செய்து கொல்லலாம். இதற்காக தண்ணீர் வசதியுள்ள இடங்களில் வரப்பு மட்டம் வரை நீரைத்தேக்கி வைத்து சில மணி நேரத்திற்குப் பின் வடிக்க வேண்டும்.

* காய்ந்த சாணம் மற்றும் குப்பை கூளங்களை எரித்து உண்டாக்கும் புகையை எலி வளைகளுக்குள் செலுத்துவதால் புகையோடு வெளிவரும் கார்பன் மோனாக்சைடு என்ற நச்சுவாயு எலிகளின் சுவாசம் மற்றும் ரத்த மண்டலங்களைப் பாதித்து கொல்கிறது.

* ஒரு ஏக்கருக்கு 25 முதல் 30 எண்ணிக்கையில் தஞ்சாவூர் எலிக்கிட்டிகளை வைத்துப் பிடித்து அழிக்கலாம்.

* எலிகள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் (வளைகளில்) ஜிங்க் பாஸ்பைடு என்னும் எலிமருந்து ஒரு பங்குடன் 49 பங்கு கருவாடு, நிலக்கடலை, பொரி போன்ற சாப்பிடும் பொருட்களுடன் கலந்த நச்சுணவை அளித்து கொல்லலாம். இதை ஒரு ஏக்கருக்கு 10 இடங்களில் வைக்க வேண்டும். ஒருமுறை இந்த நச்சுணவைச் சாப்பிட்டதும் எலிகள் இறந்துவிடும். விஷ உணவைக் கொடுப்பதற்கு முன் 2 முதல் 3 நாட்கள் விஷம் கலக்காத உணவு களை கொடுத்து

பழக்க வேண்டும். அப்போதுதான் எலிகளுக்கு உணவுக்கூச்சம் ஏற்படாது.

* ரத்தம் உறைதலைத் தடைசெய்யும் "புரோமோடயலோன்' என்ற மருந்து கலந்த கட்டி வகை மருந்துகளைக் கொடுப்பதும் எலிகளைக் கொல்ல சிறந்த முறை யாகும். இவ்வகைத் தயாரிப்புகளை எலிகள் வெறுத்து ஒதுக்காமல் விரும்பி உண்கின்றன. புரோமோ டயலோன் 0.005 சதவீதம் உள்ள கட்டிகளை வளைக்கு 15 கிராம் வீதம் வைக்க வேண்டும். எலிகள் 5 கிராம் அளவு சாப்பிட்டால் போதும். அதன் விளைவாக உடலில் ரத்தக்கசிவு ஏற்பட்டு இறந்துவிடுகின்றன.

* அலுமினியம் பாஸ்பைடு மாத்திரை ஒன்று அல்லது இரண்டு எடுத்துக்கொண்டு அடுப்பு ஊதும் குழல் போன்ற குழாய்களை உபயோகித்து எலி வளைகளின் ஆழத்தில் செலுத்தி களிமண் வைத்து அடைத்துவிட வேண்டும். நீர் மூலக்கூறு இதனுடன் சேர்ந்து பாஸ்பின் என்ற நச்சுவாயு உருவாகி எலியின் சுவாசத்தில் சேர்ந்து கொன்றுவிடும்.

* பாம்புகள், கீரிகள், காட்டுப் பூனைகள், பறவைகள் போன்ற ஊண் விழுங்கி விலங்கினங்களைக் கொல்லாமல் ஊக்குவிப்பதால் அவை எலிகளைத் தின்று கட்டுப் பாட்டுக்குள் கொன்றுவருகின்றன.

* "டி' வடிவ குச்சிகளால் ஆன பறவை தாங்கிகள் அல்லது வைக்கோலில் செய்த பந்தங்களை ஏக்கருக்கு 25 எண்ணிக்கை என்ற அளவில் வயல்களில் வைப்பதால் இரவில் ஆந்தைகள், கோட்டான்கள் போன்ற பறவைகள் அமர்ந்து எலிகளை வேட்டையாடி கட்டுப்படுத்தும்.முனைவர் ஜெ.ஜெயராஜ், முனைவர் த.ச.ராஜவேல் மற்றும் முனைவர் க.முரளிபாஸ்கரன்

வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,மதுரை-625 104.

## பருத்தி ஏற்றுமதிக்கு தடை: திருப்பூர் தொழில் துறை வர@வற்பு

மார்ச் 07,2012,00:10



திருப்பூர்,: பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளதால், திருப்பூர் தொழில் துறையினர் நிம்மதி அடைந்துள்ளனர்.சர்வதேச அளவில் அனைத்து ஜவுளி சந்தைகளிலும், சீனா முன்னோடியாக உள்ளது. அங்கு நடப்பாண்டில் பருத்தி விளைச்சல் குறைவாக இருப்பதால், இந்திய பருத்தியை நம்பியுள்ளது. இந்தியாவில் இருந்து பருத்தியை இறக்குமதி செய்வதில், அந்நாட்டு நிறுவனங்களும், அரசும், தீவிரமாக உள்ளன.கையிருப்புஇந்தியாவில், நடப்பாண்டில், 55 லட்சம் பொதிகள் கையிருப்பில் இருக்கும். இறக்குமதி ஐந்து லட்சம் பருத்தி பொதிகள், விளைச்சல் 3.40 கோடி பொதிகள் என மொத்தம், 4 கோடி பருத்தி பொதிகள் என, மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இதில், 2.40 கோடி பொதிகள், உள்நாட்டு தேவைக்கு ஒதுக்கப்பட்டது. மருத்துவம் உள்ளிட்ட பிற தேவைக்காக, 21 லட்சம் பொதிகள் ஒதுக்கப்பட்டது. மீதியுள்ள, 1.39 கோடி பொதிகள் பருத்தியில், 84 லட்சம் பொதி பருத்தியை ஏற்றுமதி செய்யவும், 55 லட்சம் பொதி பருத்தியை கையிருப்பாக வைக்கவும், முடிவு செய்யப்பட்டது.கடந்த ஐந்து மாதங்களில், நிர்ணயிக்கப்பட்ட, 84 லட்சம் பருத்தி பொதிகள், ஏற்றுமதியாகி விட்டன. மொத்த ஏற்றுமதியில், 60 சதவீத பருத்தி, சீனா சென்றுள்ளதாக கூறப்படுகிறது.வியாபார ஒப்பந்தம்இந்தியாவின் நிலைபாடுகளை அறிந்து கொண்ட சீனா, இரண்டு ஆண்டுக்கு தேவையான பருத்தியை இறக்குமதி செய்து, பதுக்கி வைப்பதென முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. அதன்படி, பருத்தி வியாபாரிகளிடம், வியாபார ஒப்பந்தம் நிறைவேறி வந்தது.நேற்று முன்தினம் நிலவரப்படி, 92 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், அனுமதிக்கப்பட்ட 84 லட்சம் பொதிகள் ஏற்றுமதியாகி விட்டது. கூடுதலாக, எட்டு லட்சம் பருத்தி பொதிகள் பதிவாகி இருப்பது, தொழில் துறையினரை அதிர்ச்சி அடைய வைத்தது. இதே நிலை தொடர்ந்தால், தரமான பருத்தி இந்தியாவில் கிடைக்காத நிலை ஏற்பட்டு, வேறுநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்று, தொழில் துறையினர் கவலை அடைந்தனர்.இந்நிலையில், பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு நேற்று முன்தினம் தடை விதித்தது. இனி, உள்நாட்டு தேவைக்கு போதுமான பருத்தி கிடைக்கும். அரசின் இந்த முடிவால், "டாஸ்மா' சங்கம் உட்பட தொழில் துறையினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தேசிய பருத்தி ஆலோசனைக் குழு உறுப்பினர் ராஜா சண்முகம் கூறியதாவது:நடப்பு ஆண்டில் ஏற்றுமதி 84 லட்சம் பொதிகள் ஒதுக்கப்பட்டது. இது நான்கு மாதங்களி@ல@ய ஏற்றுமதியாகி விட்டது. இதனால், பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டுமென தொழில்துறையினர் சார்பில் வலியுறுத்தப்பட்டது. இதையடுத்தே, பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.திருப்பூர் பனியன் தொழில் மிகவும் பிரச்னைக்குள்ளாகி உள்ளது. இந்நிலையில், பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் தொழில் காணாமல் போய்விடும். மத்திய அரசு ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையில் பட்ஜெட்டில் சலுகைகள் வழங்க வேண்டும். இவ்வாறு, ராஜாசண்முகம் தெரிவித்தார்.

**சரத்பவாருக்கு தெரியாதாம்!**

மத்திய அரசு, உள்நாட்டு நிறுவனங்களின் நலன் கருதி பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இது குறித்து வர்த்தக அமைச்சகம், தமக்கு முன்கூட்டியே தெரிவிக்கவில்லை என மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் புலம்பியுள்ளார்.இந்த நடவடிக்கையால் பருத்தியின் விலை சரிவடையும். இது, விவசாயிகளை மிகவும் பாதிக்கும். எனவே பருத்தி ஏற்றுமதிக்கான தடையை நீக்கக் கோரி, பிரதமரிடம் முறையிடுவேன் என சரத்பவார் தெரிவித்துள்ளார்.

**சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 4.71 லட்சம் டன்னாக குறைவு**

மார்ச் 07,2012,00:09



மும்பை,: சென்ற பிப்ரவரி மாதத்தில், நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 4 லட்சத்து 70 ஆயிரத்து 504 டன்னாக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியைவிட 33 சதவீதம் (7 லட்சத்து 3 ஆயிரத்து 400 டன்) குறைவாகும் என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.ஜப்பான், வியட்நாம், தென் கொரியா, சீனா, ஐரோப்பா ஆகிய நாடுகளில், இந்திய சோயா புண்ணாக்கிற்கு தேவை அதிகம் உள்ளது. இதையடுத்து, இந் நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.சென்ற ஜனவரி மாதத்தில், சோயா ஏற்றுமதி 16 சதவீதம் சரிவடைந்து, 5 லட்சத்து 76 ஆயிரத்து 383 டன்னிலிருந்து, 4 லட்சத்து 84 ஆயிரத்து 196 டன்னாக குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான, 11 மாத காலத்தில், இதன் ஏற்றுமதி, 9 சதவீதம் வளர்ச்சிகண்டு, 45 லட்சம் டன்னிலிருந்து 49 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

## பானாம்பட்டு கிராமத்தில் வெள்ளரி அமோக விளைச்சல்

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,01:05 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : பானாம்பட்டு பகுதியில் வெள்ளரி சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். விழுப்புரம் அடுத்த பானாம்பட்டு, ஆனாங்கூர், பில்லூர் ஆகிய கிராம பகுதிகளில் விவசாய நிலங்களில் நெல்லுக்கு அடுத்தபடியாக வெள்ளரி சாகுபடி அதிகளவில் விவசாயிகள் செய்துள்ளனர். மூன்று மாத சாகுபடியாக இந்த வெள்ளரிக்கு அதிகளவில் தண்ணீர் வரத்து தேவைப்படுகிறது. மேலும் டி.ஏ.பி., ஓரியண்டல் ஆகிய உர வகைகள் மூலம் செழிப்பாக வள ரும் வெள்ளரி சாகுபடியில் பானாம்பட்டு பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறைந்த செலவு மற்றும் குறைந்த காலத்தில் அதிக லாபத்தை ஈட்டி தரும் வெள்ளரி சாகுபடி, பானாம்பட்டு பகுதியில் 60 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் அறுவடைக்கு தயாராகவுள்ள இந்த வெள்ளரி பழங்கள் விழுப்புரம் மட்டுமின்றி வெளிமாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

## சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமை தர்பூசணி பழங்கள் விற்பனை "ஜோர்'

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,01:05 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : விழுப்புரத்தில் சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமையால் தர்பூசணி பழங்கள் விற்பனை சூடு பிடித்துள்ளது. கடந்த ஒரு மாத காலமாக இரவில் கடுமையான பனிப்பொழிவும், பகலில் சுட்டெரிக்கும் வெயிலால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

தினசரி வெயில் 100 டிகிரி பாரன்ஹீட்டுக்குமேல் வெப்பநிலை உள்ளது. காலநிலை மாற்றத்தால் வழக்கமாக ஏப்ரல் மாதம் விற்பனைக்கு வரும் தர்பூசணி பழங்கள் பிப்ரவரி மாதத்திலேயே விற்பனைக்கு வந்துவிட்டது. கோடைக்கு முன்னதாக சுட்டெரிக்கும் வெயில் கொடுமையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள பொதுமக்கள், தர்பூசணியை விரும்பி வாங்கி சாப்பிடுகின்றனர்.

பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள், பணிக்கு செல்லும் அரசு ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் சாலையோரம் விற்பனை செய்யப்படுகின்ற தர்பூசணி பழங்களை தவறாமல் வாங்கி சாப்பிடுகின்றனர்.

ஒரு பீஸ் 5 ரூபாய், ஒரு பழம் 30 ரூபாய் முதல் 50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

குடும்பத்துடன் சாப்பிடுவதற்கும் முழு பழமாகவும் வீட்டிற்கு வாங்கிச் செல்கின்றனர். கோடைக்கு முன்னதாக வியாபாரம் சூடுபிடித்ததால் வியாபாரிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## புளி சீஸன் துவங்கி, வரத்து இரட்டிப்பு கிலோவுக்கு ரூ. 30 வரை விலை வீழ்ச்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,02:20 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : புளி உற்பத்தி அதிகரித்துள்ளதால், விலையும் கிலோவுக்கு, 30 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்தியாவில் தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் புளி அதிகளவில் உற்பத்தியாகிறது. கொட்டைப் புளி உற்பத்தியில் கர்நாடகா முதலிடத்திலும், தமிழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளன. இங்கிருந்து வெளிநாடுகளுக்கு கொட்டைப் புளி அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணமாக, விலையும் தாறுமாறாக உயர்ந்து வந்தது.

நடப்பு ஆண்டு, புதிய புளி உற்பத்தி இருமடங்காக உயர்ந்துள்ளதால், மார்க்கெட்டுக்கு வரத்து கணிசமாக அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, புளி விலை குறைந்து வருவதால், வியாபாரிகள் குடோன்களில் இருப்பு வைக்கத் துவங்கி உள்ளனர். ஈரோட்டை சேர்ந்த விற்பனையாளர் ஒருவர் கூறியதாவது:

சென்றாண்டை விட, நடப்பாண்டு புளி உற்பத்தி அதிகரித்துள்ளது. கர்நாடகாவில் மைசூரு, தமிழகத்தில், கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி, பாலக்கோடு மற்றும் ஆந்திராவில் புளி உற்பத்தி இருமடங்காக உயர்ந்துள்ளது. இங்கிருந்து, கொட்டைப் புளி பதப்படுத்தி, தமிழகதும் முழுவதும் விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

சமையலுக்கு புளி தேவை அதிகம் உள்ளதால், அனைத்து மக்களும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தற்போது, மார்க்கெட்டுக்கு வாரத்துக்கு தோசை புளி, கருப்பு புளி வாரத்துக்கு, 50 மூட்டை வரை வரத்தாகிறது. இங்கிருந்து மாவட்டத்தில் உள்ள மளிகை கடைகள், புளி சில்லரை வியாபாரிகள் மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.

தோசை புளி கிலோ, 80 ரூபாய்க்கு விற்றது, 24 ரூபாய் குறைந்து, 56 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கறுப்பு புளி, 60 ரூபாய்க்கும், மைசூரு புளி 120 ரூபாய்க்கும் விற்றது, தற்போது, 90 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

புளி விலை குறைந்து வருவதால், விவசாயிகள் சிலர் நல்ல விலையை எதிர்பார்த்து பதுக்கி வைக்கின்றனர். வியாபாரிகளும் இருப்பு வைக்கப்பட்ட புளியை விற்பனை செய்து வருகின்றனர். மேலும், விலை சரிய சாத்தியமில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## "அசோலா' உற்பத்தியில் லாபம் அடையலாம்

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,00:02 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : ""அசோலா' உற்பத்தி மூலம், கால்நடை வளர்ப்பை லாபம் மிக்கதாக மாற்ற முடியும்' என, மாநகராட்சி உயிரியல் பூங்கா இயக்குனர் மற்றும் கால்நடை மருத்துவர் அசோகன் கூறியுள்ளார். அவர் கூறியதாவது:நீரில் மிதக்கக்கூடிய பெரணி வகையை சார்ந்த தாவரம், "அசோலா'. கால்நடைகளுக்கு மட்டுமின்றி கோழிகளுக்கும், தரமான தீவனமாக பயன்படுகிறது. கால்நடைகளுக்கு தேவையான அமினோ அமிலங்கள், தாது உப்புகள், விட்டமின்கள், பீட்டாகாரோடின் உட்பட 30 சதவீத புரதச்சத்துகள், இதில் உள்ளன.

நிழல் உள்ள இடத்தில் 10 அடி நீளம், இரண்டு அடி அகலம், ஒரு அடி ஆழம் கொண்ட பாத்தி அமைத்து, அதன் அடிப்பகுதியில், சில்பாலின் சீட்டை சீராக விரிக்க வேண்டும். பாலித்தின் சீட்டின் மேல் இரண்டு செ.மீ., அளவிற்கு தண்ணீர் ஊற்றி, பாத்தி ஒன்றுக்கு 100 கிராம் சூப்பர் பாய்பேட், ஐந்து கிலோ பசுஞ்சாணம் கரைத்து இட வேண்டும்.

குளம், குட்டைகளின் மேல், பசுமையாக மிதக்கும், "அசோலா' தாவரத்தை சேகரித்து, பாத்தி ஒன்றுக்கு ஐந்து கிலோ போட வேண்டும். இதன் மூலம், மண்ணில் உள்ள சத்துகள், தண்ணீரில்கரைந்து அசோலாவிற்கு எளிதாக கிடைக்கும். 15 நாட்களில் ஒரு பாத்தியில், 30 முதல் 50 கிலோ அசோலா தயாராகி விடும். மூன்றில் ஒரு பங்கு அசோலாவை, பாத்திலேயே விட்டு விட்டு, மீதியை அறுவடை செய்யலாம்.

பத்து நாட்களுக்கு ஒரு முறை, ஐந்து கிலோ பூஞ்சாணம் கரைப்பது நல்லது. பூச்சித்தொல்லை வந்தால், ஐந்து மில்லி வேப்பெண்ணையை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து, பாத்தியில் தெளிக்கலாம். அசோலா உற்பத்தி கோடை காலத்தில் குறைவாகவும், மழைக் காலத்தில் அதிகமாகவும் காணப்படும். அசோலாவை நம் தேவைக்கு ஏற்ப, வீட்டிற்குள் சிறு பாத்திரங்கள், தொட்டிகளில் வைத்தும் தயாரிக்கலாம்.

அசோலாவை உரமாகவும் பயன்படுத்த முடியும். ஒரு ஏக்கர் வயலுக்கு, இரண்டு சென்ட் நாற்றங்கால் தேவைப்படும். ஒரு சென்ட் நிலத்தில் பாத்தி கட்டி, 10 முதல் 15 செ.மீ., தண்ணீர் நிரப்பி, 10 முதல் 15 கிலோ சாணமும், 100 கிராம் "சூப்பர் பாஸ்பேட்' அல்லது "ராக் பாஸ்பேட்' போட வேண்டும். பின்னர், 8 முதல் 10 கிலோ அசோலாவை இதில் போட்டால், 15 நாட்களில் 80 முதல் 100 கிலோ அசோலா வரை கிடைக்கும்.

இவ்வாறு உற்பத்தி செய்யும் அசோலாவை, நெற்பயிர் இட்ட ஒரு வாரத்தில், ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு 200 கிலோ உரமாக போடலாம். இது 20 முதல் 25 நாட்களில் நன்கு வளர்ந்து, ஒரு ஏக்கர் நிலம் முழுவதும் பரவி விடும். நெற்பயிரோடு சேர்த்தும், அசோலாவை வளர்க்கலாம். அசோலாவை நுண்ணுயிர் உரமாக பயன்படுத்துவதால் 20 முதல் 30 சதவீத உரச் செலவை

குறைக்க முடியும். களை வளர்வது கட்டுப்படுத்தப்படும். நீராவி ஆவதும் தடுக்கப்படும். அசோலாவில் "லிக்னின்' மற்றும் நார்சத்து அதிகம் இருப்பதால், கால்நடைகள், கோழி, பன்றி மற்றும் மீன்களுக்கு உரமாக கொடுக்கலாம். அறுவடை செய்த அசோலாவை, மாட்டுச் சாணத்தின் வாசனை போகும்வரை, தண்ணீரில் கழுவி, தவிடு அல்லது மாட்டு தீவனத்துடன் 1-1 என்ற சதவீதத்தில் கலந்து கொடுக்க வேண்டும்.

அசோலவை ஒரு பசுவிற்கு, இரண்டு கிலோ வரை, தீவனமாக கொடுப்பதால், 15 முதல் 20 சதவீதம் வரை பால் உற்பத்தி அதிகரிக்கும். புண்ணாக்கு செலவு 25 முதல் 40 சதவீதம் வரை குறையும். பாலின் தரம் அதிகரிப்பது மற்றுமின்றி, கால்நடைகளின் ஆரோக்கியம் அதிகரித்து வாழ்நாளும் அதிகரிக்கிறது.

அசோலாவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு, ஒன்று முதல் 15 கிலோவும், இறைச்சிக் கோழி, வான்கோழிகளுக்கு 20 முதல் 30 கிராமும், ஆடுகளுக்கு 300 முதல் 500 கிராமும், வெண்பன்றிக்கு ஒன்றரை முதல் இரண்டு கிலோவும், முயலுக்கு 100 கிராமும் கொடுக்கலாம். இதில், மூன்று சதவீத கொழுப்பு சத்தும், 14 முதல் 15 சதவீத நார்சத்தும், 25 முதல் 30 சதவீத புரதசத்தும், 45 முதல் 50 சதவீத மாவுச் சத்தும் உள்ளது.

ஒரு கிலோ அசோலா உற்பத்தி செய்யும் செலவு, மிகவும் குறைவு என்பதால், தீவனச் செலவு வெகுவாக குறையும். விவசாயிகள் அசோலா உற்பத்தியில் இறங்கினால், கால்நடை வளர்ப்பை லாபகரமாக செய்ய முடியும். "விட்டமின் பி12' உருவாவதற்கு, தேவையான மூலப்பொருளாக, "பீட்டாகாரோட்டின்' உள்ளது. அசோலா கலந்த தீவனத்தை தின்று வளரும் கோழியின் முட்டைகளை சாப்பிடுவதால், மனிதர்களுக்கும் கண் பார்வை நன்றாக தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.

### வெங்காயம் விலை வீழ்ச்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,23:48 IST

கருத்தை பதிவு செய்ய

பொங்கலூர் : பொங்கலூர் வட்டாரத்தில், சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. கோடை காலம் துவங்கி விட்டதால், வெங்காயம் விரைவில் அழுகும் வாய்ப்புள்ளது. இதனால், அறுவடை செய்த வெங்காயத்தை

உடனடியாக விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அறுவடை சீசன் மற்றும் வெளியூர் வரத்து அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், குறைந்த விலைக்கே போகிறது.

ஏற்றுமதி தரம் வாய்ந்த, முதல் தர சின்ன வெங்காயம் கிலோ 10 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு இதே சீசனில், கிலோ 25 ரூபாய் வரை விற்பனையானது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்தாண்டை விட இந்தாண்டு சாகுபடி செலவு 30 சதவீதம்

வரை உயர்ந்துள்ள நிலையில், கொள்முதல் விலை சரிந்துள்ளதால், விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். வியாபாரிகள் கூறுகையில், "கடந்தாண்டு ஏற்றுமதி செய்யப்பட்டதால், உள்ளூர் மார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்தது. இந்தாண்டு மலேசியாவுக்கு மட்டுமே ஏற்றுமதி ஆர்டர் கிடைத்துள்ளது. பிற நாடுகளுக்கு ஆர்டர் கிடைக்காதது; கர்நாடகாவில் இருந்து சின்ன வெங்காயம் வரத்து ஆகிய காரணங்களால், உள்ளூர் மார்க்கெட்டில் விலை குறைந்துள்ளது,' என்றனர்.

## வெற்றிலை உற்பத்தி குறைவால் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,02:32 IST

கருத்தை பதிவு செய்ய

வாழப்பாடி : வாழப்பாடி பகுதியில், உற்பத்தி குறைவால் வெற்றிலை விலை எதிர்பாராத அளவுக்கு உயர்ந்துள்ளது.

வாழப்பாடி அடுத்த புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை, பாப்பநாயக்கன்பட்டி அணை பாசன பகுதிகள் மற்றும் கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் வெள்ளாறு, அருநூற்றுமலையில் உற்பத்தியாகும் வசிஷ்டநதி ஆற்றுப்படுகை கிராமங்களிலும், 5,000 ஹெக்டேர் பரப்பளவுக்கு வெற்றிலை பயிரிடப்பட்டுள்ளது.

பாக்குத் தோப்பில் ஊடுபயிராகவும், அகத்தி மற்றும் கல்யாண முருங்கை மர நிழலில் கொடிக்கால் அமைத்தும், நீண்டகால பலன் தரும் பணப்பயிரான வெற்றிலையை விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்கின்றனர். சேலம் கிழக்கு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கறுப்பு, வெள்ளை (தாம்பூல ரகம்) மற்றும் காஃபி கொடி உயர் ரக வெற்றிலையை, வாழப்பாடி அடுத்த பெரிய கிருஷ்ணாபுரம் மற்றும் பேளூரிலுள்ள தனியார் வெற்றிலை கமிஷன் மண்டிகளுக்கு கொண்டு சென்று, விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.

விவசாயிகளிடம் நேரடியாக வெற்றிலையை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், தரம் பிரித்து, சேலம், சென்னை, செங்கற்பட்டு, காஞ்சிபுரம், மதுராந்தகம், திண்டிவனம், கடலூர், பண்ருட்டி, கோயம்புத்தூர், திருப்பூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டுமின்றி, புதுச்சேரி, பெங்களூரு, மைசூரு உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

வாழப்பாடி பகுதியில், மூன்று மாதங்களாக கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டதால், வெற்றிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு விற்பனைக்கு வரத்து குறைந்தது. உள்ளூர் தேவைக்கே பற்றாக்குறை ஏற்பட்ட நிலையில், அண்டை மாநிலங்களிலும் கிராக்கி ஏற்பட்டதால், எதிர்பாராத அளவுக்கு விலை உயர்ந்துள்ளது.

இரு மாதங்களுக்கு முன்வரை, 1,500 முதல் 2,000 ரூபாய் வரை விலைபோன ஏறக்குறைய, 6,000

வெற்றிலைகள் கொண்ட தரமான ஒரு ஒத்து உயர்ரக வெற்றிலைக்கட்டு, தற்போது அதிகபட்சமாக, 4,000 ரூபாய்க்கு விலைபோகிறது.
ஒரு ஒத்து இரண்டாம் தர வெற்றிலைக்கட்டு, 3,000 ரூபாய் வரையும், மூன்றாம் தர கழிவினை வெற்றிலை கட்டு, 1,000 ரூபாய்க்கும் விலைபோகிறது.
உற்பத்தி பாதிப்பால் விவசாயிகளும், கடுமையான விலை உயர்வால் நுகர்வோர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிக விலை கொடுத்து வாங்கி, வெளிமாநிலங்களுக்கு அனுப்ப முடியாததால், வியாபாரிகளும் தவித்து வருகின்றனர்.
சில தினங்களாக பனிப்பொழிவு நின்றதால், மீண்டும் வெற்றிலை உற்பத்தி அதிகரிக்கும் என்பதால், எதிர்வரும் வாரத்தில் இருந்து விலை படிப்படியாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகளுக்கு விலையில்லா நெல், உளுந்து "மினி கிட்' திட்டம்: கலெக்டர் துவக்கி வைப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,00:54 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் : "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விலையில்லா நெல், உளுந்து "மினி கிட்' வழங்கும் நிகழ்ச்சி நேற்று கலெக்டர் முகாம் அலுவலகத்தில் நடந்தது. "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை முதல்வர் அறிவித்துள்ளார். அதன்படி நெல் மற்றும் உளுந்து விலையில்லா "மினி கிட்'கள் வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படுகிறது.
கடலூர் மாவட்டத்தில் நெல் விலையில்லா "மினி கிட்'கள் 9000மும் (ஒன்றின் மதிப்பு 650 ரூபாய்) உளுந்து ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 324 சிறுதளைகளும் (ஒவ்வொன்றும் 840 ரூபாய்) வழங்கப்படுகிறது.
நெல் விலையில்லா "மினி கிட்'யில் நெல் விதை 20 கிலோ, உயிர் உரம் 2 எண்கள், தாவர பூச்சிக்கொல்லி 500 மி.லி., வழங்கப்படும். உளுந்து "மினி கிட்'யில் உளுந்து விதை 8 கிலோவும், உயர் உரம் 2 பாக்கெட்டுகளும் வழங்கப்படும்.
விலையில்லா நெல் மற்றும் உளுந்து "மினி கிட்' விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்ச்சியினை கடலூர் கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர் (தானே புயல் மறுவாழ்வு) வீரராகவ ராவ் முன்னிலை வகித்தார். கலெக்டர் ராஜேந்திர ரத்னு தலைமை தாங்கி விவசாயிகளுக்கு வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார்.
இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை துணை இயக்குனர் அசோகன், உதவி இயக்குனர் இளவரசன், சப் கலெக்டர் கிரண்குராலா,

பி.ஆர்.ஓ., தமிழ்ச்செல்வன் பங்கேற்றனர். பின்னர் கலெக்டர் ராஜேந்திர ரத்னு கூறியதாவது: "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார விரிவாக்க மையங்களை அணுகி சிறுதளைகள் பெற்று மீண்டும் சாகுபடி செய்து உணவு தானிய உற்பத்தியினை பெருக்கிட வேண்டும். புயலால் பயிர் பாதிக்கப்பட்டு விடுபட்ட விவசாயிகள் நிவாரணம் கேட்டு மனு செய்துள்ளனர். மனுக்கள் கிராம நிர்வாக அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டு உண்மையாக இருந்தால் கண்டிப்பாக நிவாரணம் வழங்கப்படும்' என்றார்.

## தமிழகத்தில் ரூ.60 கோடிக்கு பருத்தி தேக்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 07,2012,02:31 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: தொடர் விலை வீழ்ச்சி மற்றும் மின்தடையால் பருத்தி அரவை பணிகள் பாதித்துள்ளதாலும், இருப்பு வைத்துள்ள பருத்தியை, வியாபாரிகள் பணம் செலுத்தி எடுத்துச் செல்லாததாலும், தமிழகம் முழுவதும், 110 கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில், பருத்தி ஏலத்தை திடீரென ரத்து செய்துள்ளனர்.

சேலம், ஆத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில், பருத்தி, மஞ்சள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களை விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். அறுவடை செய்யும் மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளை, தமிழகத்தில் உள்ள, 110 கூட்டுறவு வேளாண்மை விற்பனை மையம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில் நடக்கும் ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த ஆண்டு பருத்தி விளைச்சல் குறைந்த போதும், தொடர்ந்து விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் தொடர்மின்தடையால், பருத்தி அரவை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால், விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, கூட்டுறவு மையங்களில் இருப்பு வைத்துள்ள பருத்தி மூட்டைகளை, வியாபாரிகள் எடுத்து செல்லாமல் உள்ளனர். இதில், ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், ஐந்து வாரங்களாக நடந்த பருத்தி ஏலத்தில் கொள்முதல் செய்துள்ள, 11 கோடி ரூபாய் மதிப்பிலான, 60 ஆயிரம் பருத்தி மூட்டைகளும், திருச்செங்கோட்டில், 19 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தி மூட்டைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

சேலம், நாமக்கல் மாவட்டத்தின், கூட்டுறவு விற்பனை மையங்களில் மட்டும், 60 கோடி ரூபாய்க்கு மேலான பருத்தி இருப்பு உள்ளன. அதன் காரணமாக, கடந்த 2ம் தேதி, கொள்முதல் செய்யும் பருத்தி மூட்டைகள் இருப்பு வைக்க முடியாததால், பருத்தி ஏலத்தை ரத்து செய்தனர். வரும் 9ம்

தேதி ஆத்தூரில் நடக்கும் பருத்தி ஏலத்தை ரத்து செய்துள்ளதாக, கூட்டுறவு தனி அலுவலர் ராஜமாணிக்கம் தெரிவித்துள்ளார். மேலும், அனைத்து கூட்டுறவு மையங்களிலும், பருத்தி ஏலம் ரத்து செய்துள்ளதாகவும், தகவல் வெளியாகி உள்ளது. அதனால், விவசாய நிலத்தில் அறுவடை செய்த பருத்தியை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.
ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க அலுவலர்கள் கூறியதாவது: கடந்த 23ம் தேதி, ஆத்தூரில் மையத்தில், 3.10 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. ஐந்து வாரங்களில், விவசாயிகளிடம் கொள்முதல் செய்து இருப்பு வைத்துள்ள, 11 கோடி ரூபாய் மதிப்பிலான பருத்தி மூட்டைகளை, வியபாரிகள் பணம் செலுத்தி எடுத்து செல்லாததால், தொடர்ந்து ஏலம் நடத்த முடியாத நிலை உள்ளது. அதனால், இந்த வாரம், கூட்டுறவு சங்கங்களில், பருத்தி ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

## பெசன்ட் நகர் கடற்கரையில் 673 கிலோ கடல் கொடி அவரை விதைகள் சேகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,23:12 IST

கருத்தை பதிவு செய்ய

சென்னை :பெசன்ட்நகர் அஷ்டலட்சுமி கோவில் பின்புறமுள்ள கடற்கரைப் பகுதியிலிருந்து, 673 கிலோ, கடல் கொடி அவரை விதைகள் நேற்று சேகரிக்கப்பட்டன.
சென்னை பெசன்ட்நகர் அஷ்டலட்சுமி கோவில் பின்புறமுள்ள கடற்கரைப் பகுதியில் காணப்படும், கடல் கொடி அவரை தாவரம் கடல் மண் அரிப்புகளை தடுத்து நிறுத்தும் தன்மை வாய்ந்தது.
இந்த தாவர விதைகளை மற்ற கடலோரப் பகுதிகளில் தூவி, வளர்ப்பதற்கு விதைகள் சேமிப்பு முகாம் நேற்று நடந்தது.
இந்நிகழ்ச்சிக்கு ட்ரீ பேங்க் சுற்றுச் சூழல் அறக்கட்டளை அமைப்பின் தலைவர் முல்லைவனம், தலைமை வகித்தார். சுகா வேலை வாய்ப்பு சேவை மையம் இயக்குனர் சுகவனம், பேராசிரியர் தமிழரசி, சமூக சேவகி கற்பகம் மற்றும் மகளிர் குழுக்கள், ஆல்பா கல்லூரி மாணவர்கள் உட்பட 200 பேர் கலந்து கொண்டனர்.
இந்த முகாமில் 673 கிலோ கடல் கொடி அவரை விதைகள் சேகரிக்கப்பட்டன. இவ்விதைகளைப் பதப்படுத்தி, முறையாக பொதுப்பணித்துறையிடம் அனுமதி பெற்று நீலாங்கரை, முட்டுக்காடு, மாமல்லபுரம் மற்றும் கடலோரப் பகுதிகளில் விதைக்கப்படவுள்ளன.

**முருங்கைக்காய் விலை இறங்குமுகம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,22:04 IST

கருத்தை பதிவு செய்ய

தமிழக முருங்கைக்காய் வரத்து கோயம்பேடு மார்க்கெட்டில் அதிகரித்துள்ளதால், விலை இறங்குமுகமாக உள்ளது.

தேனி, ஒட்டன்சத்திரம், பெரம்பலூர், திண்டுக்கல் பகுதிகளில் இருந்தும், குஜராத், மகாராஷ்டிரா உள்ளிட்ட பிற மாநிலங்களில்

இருந்தும் கோயம்பேடுக்கு முருங்கைக்காய் வரத்து உள்ளது.

தமிழகத்தில் முருங்கைக்காய் உற்பத்தி குறைவாக இருந்தது. இதனால் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து கொண்டுவரப்பட்டதன் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நாள் ஒன்றுக்கு, 18 முதல் 20 டன் வரையே வரத்து இருந்தது. தேவை 200 டன்னாக இருந்தது. இதனால், முருங்கைக்காய் விலை முறுக்கிக் கொண்டு உயர்ந்தது. கடந்த மாதம் கிலோ 85 ரூபாய் வரை விற்கப்பட்டது.

தமிழக முருங்கைக்காய் வரத்து துவங்கியுள்ளது. நாள் ஒன்றுக்கு, 40 டன்னுக்கும் குறையாமல் வரத்துள்ளதால் கிலோ 55 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

பெரம்பலூர் மற்றும் கரூர் பகுதியில் இருந்து வரத்து துவங்கவுள்ளதால் விலை சரியும் என்று வியாபாரிகள் கூறினர்.

கோயம்பேடு காய்கறி மொத்த வியாபாரி சவுந்தர ராஜன் கூறுகையில், ""தற்போது அதிகளவில் பூக்கள் பூத்துள்ளதால் முருங்கை வரத்து மார்க்கெட்டிற்கு அதிகரிக்கும். அடுத்தடுத்த மாதங்களில் அதன் விலை கிலோ 10

ரூபாய்க்கு வந்து விடும்," என்றார்.

**சொட்டு நீருக்கான விதிமுறைகளை தளர்த்த வேண்டும் : கரும்பு விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,21:27 IST

கருத்தை பதிவு செய்ய

கரும்பு பயிருக்கு சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கான 100 சதவீத மானியம் வழங்குவதற்கான விதிமுறைகளை அரசு தளர்த்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் பல லட்சம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்படுகிறது. இதுவரை

இரண்டரை அடி அகலக்கால் முறையில் கரும்பு பயிரிட்டனர். இதில் எந்த வேலைக்கும் இயந்திரங்களை பயன்படுத்த முடியாது.
ஆட்களை நம்பியே பயிர் செய்ய வேண்டும். ஆட்கள் தேவையைக் குறைக்க ஐந்தடி அகலத்தில் கால் அமைத்து கரும்பு பயிரிடும் முறை வந்தது. இதில் களை எடுக்க மண் அணைக்க, அறுவடை செய்ய இயந்திரங்களை பயன்படுத்த முடியும்.
மேலும் இம்முறையில் சொட்டு நீர் பாசன முறை பயன்படுத்தி குறைவான தண்ணீரில் அதிக மக‹ல் எடுக்க முடியும். கடந்த தி.மு.க., ஆட்சியில் சொட்டுநீர் பாசனம் அமைக்க 65 சதவீத மானியம் அல்லது ஏக்கருக்கு 14 ஆயிரத்து 500 எது குறைவோ அந்த அளவில் மானியம் வழங்கப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தது 50 ஆயிரம் ரூபாய் செலவாகும்.
புதுச்சேரி மாநிலத்தில் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் 100 சதவீதம் மானியம் வழங்குவது போல் தமிழகத்திலும் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்தவுடன் கரும்பில் சொட்டு நீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா கூறினார்.
விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், விதிமுறைகளால் மகிழ்ச்சி நீடிக்காமல் போனது. விவசாயி பெயரில் பட்டா இருக்க வேண்டும். கூட்டு பட்டாவாக இருக்கக் கூடாது. சிறு விவசாயி என தாசில்தார் சான்று தேவை. குத்தகை நிலமாக இருந்தால் 10 ஆண்டு குத்தகை பதிவு செய்ய வேண்டும்.
ஒரு ஆழ்துளை கிணறு இருந்தால் குறைந்தது ஒன்றரை ஏக்கருக்கும் அதிக பட்சமாக ஐந்து ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும் என விதிமுறைகளை விதித்துள்ளது.
ஒரு ஏக்கருக்கு தரமான நிறுவனம் மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டுமென்றால் குறைந்தது 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்.
ஆனால் அரசு 100 சதவீத மானியம் என ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் மட்டுமே மானியமாக வழங்குகிறது. செம்மை கரும்பு சாகுபடி முறையில் பயிர் செய்தால் மட்டுமே மானியம் கிடைக்கும். ஒருப்பரு கரும்பு கரணையை நாற்றாக உருவாக்கி ஐந்து அடி அகலக்காலில் இரண்டடி இடைவெளியில் ஒரு நாற்று நடுவதே செம்மைக் கரும்பு சாகுபடியாகும். இம்முறையில் 20 பேர் குழுவாக பயிர் செய்ய வேண்டும்.
புதியதாக வந்துள்ள இம்முறையில் பயிர் செய்ய விவசாயிகள் அச்சப்படுவதால் சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் பெற முடியாத நிலை உள்ளது. கடந்த ஆட்சியில் சொட்டுநீர் நிறுவனங்களுக்கு 20 கோடி ரூபாய்க்கு மேல் மானியத் தொகை அரசிடம் இருந்து வரவேண்டியுள்ளது.
இதனால் அந்த நிறுவனங்கள் புதியதாக சொட்டுநீர் அமைக்க ஆர்வம் காட்டவில்லை. தற்போது அறிவித்துள்ள முறையிலும் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இவற்றை எளிமை படுத்த வேண்டும்.

புதுச்சேரி மாநிலம் போல் எந்த கட்டுபாடும் இல்லாமல் நூறு சதவீத மானியம் வழங்கினால் மட்டுமே விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைக்க ஆர்வம் காட்டுவார்கள்.

## விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,23:48 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அடுத்த மாக்கினாம்பட்டியில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய வேளாண் துறை சார்பில் மாக்கினாம்பட்டியில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) நிர்மலா வரவேற்றார். மாக்கினாம்பட்டி ஊராட்சி தலைவர் அழகிரிராஜ் முன்னிலை வகித்தார்.

தெற்கு ஒன்றிய தலைவர் உமாமகேஸ்வரி, ஒன்றிய கவுன்சிலர் கங்காதரன், சோல பாளையம் ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி, பாசன சங்க தலைவர் நாகராஜன் ஆகியோர் பேசினர்.

விவசாயிகள் தரமான விதைகளை உற்பத்தி செய்யும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு அஸ்திவாரமாக இருப்பது விதை. அதனால், விவசாயிகள் சான்றிதழ் செய்யப்பட்ட விதைகளை கவனித்து வாங்க வேண்டும்.

தரமான விதை விவசாயத்தின் உற்பத்தியையும், விவசாயிகளின் பொருளாதாரத்தையும் உயர்வடைய செய்யும் என்று பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது.

விதை விதைப்பு முதல் அறுவடை வரையிலான தொழில்நுட்ப ஆலோசனைகளை விதை சான்று அலுவலர் மகாலிங்கம் தெரிவித்தார். உதவி வேளாண்மை அலுவலர் அசோகன் நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு மானிய திட்டங்கள்: வேளாண்துறை தகவல்

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,23:48 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில் நீர்வள மற்றும் நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய திட்டங்கள் வழங்கப்படுகிறது.

வேளாண் உதவி இயக்குனர்

(பொறுப்பு) நிர்மலா அறிக்கை: பொள் ளாச்சி தெற்கு வட்டாரத்தில் நீர்வள மற்றும் நிலவள திட்டத்தின் கீழ் விவசாய மானிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. பாலாறு மற்றும் ஆழியாறு படுகை விவசாயிகளுக்கு செயல்விளக்க திடல் அமைக்க ஒரு ஹெக்டருக்கு மக்காச்சோள விதை, ஒரு ஹெக்டருக்கு பயிறு வகைகள் வழங்கப்படுகிறது.

மேலும், பயறு வகை விதைப்பு கருவிகள், சில்பாலின் முறை மண்புழு உர உற்பத்தி, விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான் மற்றும் பண்ணை கழிவுகளை மட்க வைத்து உரமாக்கும் திட்டங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இந்த திட்டத்தில் பயன்பெற வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அந்தந்த பகுதி உதவி வேளாண் அலுவலர்களையும் தொடர்பு கொண்டு திட்டங்களை தெரிந்து கொள்ளலாம்.

## "மூன்று மாதங்களுக்கு தேங்காய் விலை ஏறாது'

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,23:48 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : "தேங்காய் விலை, அடுத்த மூன்று மாதங்களுக்கு எந்த மாற்றம் இல்லாமல், சீராக இருக்கும்' என, தமிழ்நாடு வேளாண் பல்கலையின், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:

வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், பொள்ளாச்சி தேங்காய் விலைகளை ஆய்வு செய்தது. தமிழகத்தில் தேங்காய்களின் தேவை குறைவாக உள்ளதால், விலையும் இறங்கு முகத்தில் உள்ளது.

தமிழகத்தில் 2008-09ம் ஆண்டு 3.42 மில்லியன் டன்களாக இருந்த உற்பத்தி, 2009-10ம் ஆண்டு 3.69 டன்களாக அதிகரித்தது. இந்தாண்டு இந்தியாவின் கொப்பரை உற்பத்தி 10.5 லட்சம் டன்கள் வரை எட்டலாம். இதில், தமிழகத்தின் பங்கு 40 சதவீதமாக உள்ளதால், தேங்காய் இருப்பும் அதிகமாக உள்ளது.

கடந்த ஆண்டு, பொள்ளாச்சி சந்தையில் கிலோ 13 ரூபாயாக இருந்த தேங்காய் விலை, உற்பத்தி அதிகரிப்பால், தற்போது ஒன்பது ரூபாயாக குறைந்துள்ளது. பொள்ளாச்சி தவிர மற்ற சந்தைகளில் விவசாயிகள் பெறும் விலை இதை விட குறைவாகவே இருக்கும்.

கடந்த ஏப்ரல்,மே மாதங்களில், காய் ஒன்றுக்கு 10 ரூபாயாக இருந்தது, தற்போது 5-7 ரூபாயாக உள்ளது. கோடை காலத்தில் தேங்காய் உற்பத்தி அதிகமாகும் என்பதால், அடுத்த மூன்று

மாதங்களுக்கு விலை மாற்றம் இருக்காது.
தொழிற்சாலைத் தேவைகள் இல்லாதது, பாமாயிலின் விலை சரிவு, தொடர் மின்வெட்டால் தேங்காய் எண்ணெய் விலையும் அதிகரிக்காது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த தேங்காய்களை, இருப்பு வைக்காமல் விற்கலாம், என பரிந்துரைக்கப்படுகிறது.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது..

**தேங்காய் பறிக்க தடை: விலை உயரும் வரை காத்திருக்க முடிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,23:27 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் :ராமநாதபுரம் மாவட்டத்தில் விலை உயரும் வரை தேங்காய்களை பறிப்பதில்லை, என தென்னை விவசாயிகள் முடிவு எடுத்துள்ளனர்.
ராமநாதபுரத்தில் தென்னை விவசாயிகள் சங்க கூட்டம் மாவட்ட தலைவர் செல்லத்துரை அப்துல்லா தலைமையில் நடந்தது. விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் ஞானவாசகம், மாவட்ட செயலாளர் தனிக்கொடி முன்னிலை வகித்தனர்.
விலை உயரும் வரை தேங்காய்களை பறிக்க வேண்டாம், உரித்த தேங்காய்களை கிலோ 22க்கு அரசு, விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும், உரம் விலை உயர்வை ரத்து வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பதனீர் விலை உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,21:36 IST

கருத்தை பதிவு செய்ய

ஸ்ரீவில்லிபுத்தூர் : பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்கப்படும், பாக்கெட் பதனீர் விலை அதிகரித்துள்ளது.
ரூ.6க்கு விற்ற 200 மி.லி., பாக்கெட் ரூ. ஏழானது.
ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பதனீர் சீசன் ஆரம்பித்துள்ளதால், இதை பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் கொடுத்து வருகின்றனர். இங்கு பதப்படுத்தி பாலீதீன் கவரில் பாக்கெட் செய்து விற்கின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் மதுரை, விருதுநகர், திண்டுக்கல், மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு விற்பனை சங்கங்கங்கள், கடந்தாண்டு வரை 200 மி.லி., பதனீரை ரூ.ஆறுக்கு விற்றது. தற்போது ஒரு ரூபாய் அதிகரித்து,ரூ. ஏழு க்கு விற்கிறது.

கூட்டுறவு சங்க ஊழியர் ஒருவர் கூறியதாவது: கூலி உயர்ந்ததால் இதன் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, என்றார்.